# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registared at the G. P. O. as a Newspaper in Ceylon

விலை சதம் 10


**அறிவிப்பு**

காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு :

காந்தி நிலையம்
உருத்திரபுரம்


மலர் 6 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 99) 1969 ஏப்ரில் - மே | இதழ் 7 - 8


# சத்தியாக்கிரகம் எது?

தன்னுதவி, தியாகம், கடவுளிடம் பக்தி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது சத்தியாக்கிரகம். சுத்தமான மனத்துடன் செய்யப்படும் எல்லா வேலைகளும் பயனை அளித்தே தீரும். அவற்றின் பலன் நம் கண்களுக்குத் தெரிந்தாலும் சரி, தெரியாது போனாலும் சரி இந்த நம்பிக்கை சத்தியாக்கிரகி என்ற வகையில் எனக்கு உண்டு கடைசியாகவும், சத்தியத்தோடு கூடிய எல்லா இயக்கங்களும், தாமாகவே எல்லா வகையிலும் களங்கமற்றதும் தன்னலமற்றதுமான உதவியைத் தம் முன் ஐக்கியமாக்கிக் கொள்ளுகின்றன.

பகைமைக்கே இடம் அளிக்காததும், தன்னிடத்தில் உறுதியைக் கைவிடாததும், மற்றவர் உதவியை எதிர்பார்த்து ஒருவர் நிற்க வேண்டிய அவசியம் இராததும், ஒரு வீரன் இறந்து படினும் அவனுடைய மரணம் சோர்வை உண்டாக்குவதற்குப் பதிலாகப் போராட்டத்தை இன்னும் வலுவாக்கும் வகையில் எல்லோருமே தலைவர்களாகவும், எல்லோருமே தொண்டர்களாகவும் காரியங்களை நடத்துவதுமான சத்தியாக்கிரக இயக்கம் போன்ற ஒரு போராட்டத்தில் தான் உண்மை இருக்க முடியும்.

நினைத்த போதெல்லாம், கண்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் சத்தியாக்கிரகம் செய்வது துராக்கிரகமாகி விடும். தனக்குள்ள சக்தியைத் தெரிந்து கொள்ளாமல் ஏதாவது சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டு பிறகு தோல்வியுற்றால், அவர் தம்மை இழிவாக்கிக் கொள்வதுடன் நிகரற்ற ஆயுதமாகிய சத்தியாக்கிரகத்தைத் தம் மடமையால் இகழ்ச்சிக்குக் கொண்டு வந்து விட்ட வருமாவார்.

வஞ்சம் தீர்த்துக் கொள்ளுவது சத்தியாக்கிரகத்திற்கு மாறானது. துன்பத்தைத் தரும் பெரிய சங்கடங்கள் ஏற்படும் போது, அமைதியாக இருப்பது தான் ஒரு சத்தியாக்கிரகிக்கு உகந்தது. அடிப்படைக் கொள்கைகளுக்காக மாத்திரமே சத்தியாக்கிரகி போராடுகிறான்.

அவநம்பிக்கை பலவீனத்தின் சின்னம். சத்தியாக்கிரகத்தின் பொருள் எதிரியை அழிக்காமல், நம் பக்கம் திருப்புவதாகும். இதற்கு கொஞ்சமும் பொருத்த மில்லாததான எல்லாப் பலவீனத்தையும் அகற்றுவதும் அவநம்பிக்கையை விரட்டுவதும் அவசியமாகிறது.

— காந்தியடிகள்.

## அன்பர்களுக்கு ... ...

வணக்கம். உலகம் போற்றும் உத்தமர் காந்தி அடிகளின் நூற்றாண்டு விழாவை உலகெங்கும் அதிவிமரிசையாகக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டு வருவதைத் தாங்கள் அறிவீர்கள். அஹிம்சா மூர்த்தியான மகாத்மா வாழ்ந்த யுகத்தில் வாழக் கிடைத்தது பெரும் பாக்கியம். அவரின் நூற்றாண்டு விழாவில் நாம் ஒவ்வொருவரும் கலந்து கொள்வதோடு அடிகளின் நிர்மாணத் திட்டங்களைச் செயற்படுத்தச் சங்கற்பம் கொள்வோமாக. இதன் பலனாக ஒவ்வொரு கிராமங்களிலும் நகரங்களிலும் மூலை முடுக்கெங்கும் காந்திய—சர்வோதயச் செய்திகளைப் பரப்ப வேண்டும். இப்பணிக்கு மூலாதாரமாக ஆங்காங்கு சிரமதானம், சம்பத்துத்தானம், சர்வோதயப்பாத்திரம் ஆகியவைகளை மேற்கொள்ளலாம். இப்பணிகளில் தாங்கள் மேற்கொள்ளும் செயல்திட்டங்கள் பற்றிச் சுருக்கமாக எழுதி அனுப்பினால் ''காந்தீயம்'' பத்திரிகையில் வெளியிட உதவியாக இருக்கும்.

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி.
காந்தி ஆண்டு 99
1969 ஏப்ரில்—மே

## சமூக சேவை

திருவள்ளுவர் நேர்முகமாகச் சமூக சேவையென்று ஒரு பொருளையும் பற்றிக் கூறவில்லை. அக்காலத்தில் சமூகசேவை யென்று இப்பொழுது நாம் கூறுவது போன்ற ஒரு சொல்லாட்சி இருக்கவில்லை. எனினும் வள்ளுவர் சமூக சேவையைப்பற்றி ஒப்புரவில் கூறியுள்ளார். ஒப்புரவு என்பது சமாதானம் தான். ஒப்பு சமத்தைக் குறிக்கும். உரவு சமத்தினை வலியுறுத்தலைக்குறிக்கும். எனவே ஒப்புரவு என்பதற்கு உரையாசிரியர்கள் உலக நடையினை அறிந்து செய்தல் என்று பொருள் கூறுவர். அது சரியன்யறு. ஏனெனில் வள்ளுவர் அந்த அதிகாரத்தில் இரண்டாம் குறளில்

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம், தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்று கூறுகிறார். இதன் பொருள் என்ன? பாடுபட்டுத் தேடிய பொருளால் என்ன பயன்? அப்பொருள் முழுவதும் தக்கவர்க்குக் கொடுத்து உதவுதற் பொருட்டாகும். முழுவதும் என்கின்ற பொழுது அதில் தனக்கு அத்தியாவசியமான தேவை -போக மீதியைக் கொடுக்க வேண்டு மென்பது பொருள். கொடுப்பதும் தக்கார்க்குக் கொடுக்க வேண்டும். தக்கார்க்கு என்பது உண்மையாகத் தேவை யொன்றினையுடையவர்க்காகும். சமூகத்தில் சில இயற்கை நிகழ்ச்சிகள் காரணமாகவும் வேறு சில இன்னல்களாலும் வறுமைப் பட்டவரே தக்கவர். பாகுபாடின்றி எல்லார்க்கும் கொடுத்தல் ஒப்புரவாகாது. வறியார்க்கு ஈவதே ஈகை என்ற வள்ளுவரின் வாசகத்தையும் நினைவு கொள்ளல் நல்லது.

இன்னும் ஈகை என்பது கொடை பெறுவார் யாரென்று அறிந்து கொடுப்பது. ஒப்புரவு என்பது கொடை பெறுவார் யாவரென்று அறியாமல், தகுதி மட்டும் அறிந்து கொடுத்தலாகும். இதற்கு பள்ளிக்கூடங்கள் நிறுவல், அநாதைப்பிள்ளைகள் நலத்திற்கு நிதி வழங்கல் முதலியவற்றை உதாரணமாகக் கூறலாம்.

இனி வள்ளுவர் எப்படிப்பட்ட பொருளைக் கொடுக்க வேண்டு மென்று சொல்கிறார் என்பதையும் கவனிக்க வேண்டும். பாடுபட்டு உழைத்த பணத்தையே கொடுக்க வேண்டு மென்கின்றார். சிலர்' ஏன் பலர்க்கே, தாம் அரிதில் முயன்று பெற்ற செல்வத்தில் ஒரு சிறு பகுதியையேனும் மற்றையவர்க்குக் கொடுக்க மனம் வராது. வருந்தியுழையாத சொத்திருந்தால் யாருக்கேனும் மனம் வரும். ஆயின் அரிதில் முயன்று பெற்றதைக் கொடுக்க மனம் வருமா? அதனை நோக்கியே வள்ளுவர் "தாழ் ஆற்றித் தந்த பெருள்" என்கின்றார். வினைசெய்து, மீதிவையாது வேண்டியவர்க்குக் கொடு. இதுதான் சமதர்மம்; ஒப்புரவு.

இதிலிருந்து ஒன்று புலனாகின்றது. ஒருவன் உழைத்துத் தன் குடும்பத்திற் கென்று மீதி விட்டுச் செல்ல வேண்டிய அவசியமில்லை. ஒருவன் தன் முது சொத்திலிருந்தும் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பமும் ஏற்படாது. எனவே ஒருவன் உழைப்பது தனக்காக மட்டுமன்று பிறர்க்குமாம் என்பது தெளிவாகும்.

இனி "வேளாண்மை செய்தல்" என்ற சொல்லையும் கவனித்தல் வேண்டும். வேளாண்மை யென்பது, பாடுபட்டுச் செல்வத்தை உழைத்தது போல் பாடுபட்டு விரும்பி முயன்று பிறர்க்குக் கொடுப்பதைக் குறிக்கும். ஆண்மை யென்பது இங்கு தான் முனைப்பாக நின்று செய்யும் தன்மையைக் குறிக்கும். தேடிவருவோர்க்குக்

## கந்தளாயில் காந்தியம் பரவுகிறது

கந்தளாய்- காந்திஜீ இளைஞர் மன்ற கௌரவ செயலாளர் திரு' நடராஜன் காந்திய—சர்வோதய கருத்துக்களைப் பரப்புவதற்குத்தாம் மேற்கொண்டுள்ள பணிகுறித்து எழுதியிருப்பதாவது, மகாத்மா காந்தி அடிகளின் கொள்கைக்கமைய எங்கள் கிராமத்தை முன்னேற்றவும் தீண்டாமை, மது விலக்கு முதலிய நிர்மானப்பணிகளை மேற்கொள்ளவும் காந்திஜீ இளைஞர் மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமது பணியின் முதற்படியாக ஒரு படிப்பகத்தை ஆரம்பித்துள்ளோம். இதன் மூலம் இளைஞரை ஒன்று கூட்டி எமது இலட்சியத்தைப் பரப்ப முடியுமென நம்புகிறோம்.

குறிப்பு: இதேபோல் ஈழநாட்டில் நூற்றுக் கணக்கான மன்றங்கள் செயற்படுகின்றன. அவைஒவ்வொன்றும் தத்தம் பணிபற்றி எழுதி அனுப்பினுல் 'காந்தியம்' பத்திரிகையில் வெளியிடப்படும். (ஆ—ர்)

## சர்வோதயப் பாத்திரம்

கொழும்பில் இதுவரை 150 இல்லங்களில் சர்வோயப்பாத்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. காந்தி நூற்றுண்டுவிழா நடைபெற்றுவரும் இவ்வாண்டில் காந்தியடிகள் பிறந்த நாளான ஒக்டோபர் 2 ஆம் திகதிக்குள் ஆயிரம் பாத்திரங்கள் இயங்குவதற்கான தீவிர இயக்கம் செயல்ப்பட்டு வருகிறது.
தலைநகரில் சர்வோதயப் பாத்திர இயக்கத்திற்கு மிக்க வரவேற்பு இருக்கிறது. வெகுவாகப்பலரைக் கவர்ந்திருக்கிறது.

கொடுப்தோடு நின்று விடாது. சமூகத்தில் எங்கு குறைவு, நலிவு உண்டு என்று அறிந்து தேடிப்போய் உதவி செய்தல் வேண்டும். அதுவே வேளாண்மை.

தன் உழைப்பைத் தன் நுகர்ச்சிக்குமட்டும் கட்டுப்படுத்தாது பகிர்ந்து மற்றையவர் நுகர்ச்சிக்கும் வழிகாணல்தான் ஒப்புரவு.

—இ. இரத்தினம்.

# இரத்மலானை சர்வோதய நிகேதனக் கட்டட நிதி

காந்தி நூற்றுண்டு விழா ஞாபகார்த்தமாக இரத்மலானை இந்துக் கல்லூரிச் சதுக்கத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள சர்வோதய நிகேதனத்தில் கதர்உற்பத்தி நிலையத்திற்கான கட்டடத்திற்கு ஸ்ரீ ஜயபிரகாஷ் நாராயன் அவர்கள் சென்ற ஆண்டு அடிக்கல் நாட்டினுர். இக்கட்டட வேலை 31—1—69 இல் ஆரம்பிக்கப்பட்டு அத்திவாரம் வரை சிரமதானம் மூலம் கட்டப்பட்டுள்ளது. இதற்கு நிதி உதவிய அன்பர்களின் பெயர் களை மகிச்சியுடன் வெளியிடுகிறோம்.

| | ரூபா | சதம் |
|---|---|---|
| திரு. தி. இராசதுரை<br>இந்துக்கல்லூரிச் சதுக்கம்<br>இரத்மலானை. | 1992 | 00 |
| திரு. க. கனகசபை<br>பான்ஸ் இடம் கொழும்பு | 500 | 00 |
| செனட்டர். சோ. நடேசன்<br>காசல் ஒழுங்கை கொழும்பு | 200 | 00 |
| திரு. கே. வி. தங்கராசா<br>நியுபுல்லஸ் வீதி, கொழும்பு | 100 | 00 |
| டாம்வீதி, கொழும்பு. 12 | | |
| கே. கே. எஸ். ஸ்டோர் | 101 | 00 |
| பி. ஆர். எம். அன்ட் கம்பனி | 101 | 00 |
| பழையசோனகத்தெரு கொழும்பு | | |
| திரு. ஈ. சிற்றம்பலம் | 101 | 00 |
| நியு ஸ்ரீ. முருகன்ஸ்டோர் | 101 | 00 |
| வீ. ஆர். எம். அன்ட்கம்பனி | 101 | 00 |
| எம். கே. ஏ. அன்ட் கம்பனி | 51 | 00 |
| பி. எஸ். எம். முகமதுமீரா<br>சைபோ அன்ட் கம்பனி | 51 | 00 |
| ஸ்ரீ லங்கா பாக்கு ஸ்டோர் | 51 | 00 |
| விஜயா ரேடஸ் | 51 | 00 |
| சுலைகா ஸ்டோர் | 51 | 00 |
| ஜயவர்த்தன அன் கம்பனி | 51 | 00 |
| திரு. கே. சுப்பையா | 101 | 00 |
| லோகராஜா ஸ்டோர் | 51 | 00 |
| ஜே. ஏ. முகமது மீராசை<br>அன்ட் கம்பனி | 51 | 00 |
| சிலோன் பாக் ஸ்டோர் | 51 | 00 |
| கொழும்பு கொட்டைப்பாக்கு<br>கம்பனி | 51 | 00 |
| ஏ. எஸ். எம். அப்துல் காதர்<br>அவர்கள் | 51 | 00 |

திரு. சி. சாத்தப்பன் கொலிங்வூட் வெள்ளவத்தை 6 கியுப் கருகல்த்தூள் அன்பளிப்புச்செய்துள்ளார்.

## சிரமதான முகாம்

இரத்மலானை இந்துக்கல்லூரிச் சதுக்கத்தில் நிறுவப் பெற்றுள்ள சர்வோதய நிகேதனத்தில் காந்தி நூற்றுண்டு ஞாபகார்த்தக் கட்டட சிரமதான முகாம் 31—1—69 தொடக்கம் 4—2—69 வரை நடைபெற்றது. இக்கட்டடத்தின் இரண்டாவது முகாம் 31—6—69 தொடக்கம் 5—6—69 வரை மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெறும். இம் முகாமின் போது கட்டடத்திற்கு வேண்டிய கொங்றீற் கல் தயாரிக்கப்படும். இதற்கு வேண்டிய சிமெந்து மணல் முதலிய மூலப்பொருட்களை திருவாளர், தி. இராசதுரை, சி. சாத்தப்பன் ஆகியோர் அன்பளிப்புச் செய்கிறுர்கள் 13—6—69 காலை 8.30 மணிக்கு முகாமை திரு. எஸ். இராமகிருஷ்ணன் அவர்கள் ஆரம்பித்துவைப்பார்கள். முகாமில் பங்கு பற்றுபவர்கள்.

இலங்கை கிராம அபிவிருத்தி இயக்கம்.
தர்மபால சமாஜய, நாரஹேன் பிட்டி.
அரசாங்க கட்டுவேலை சிரமதானப் பகுதி.
மத்திய மகாவித்தியாலயம் கொட்டாஞ்சேனை.
தமிழ்ப்பாடசாலை — தெஹிவளை
தமிழ் மகாவித்தியாலயம் நுகேகொட
சென்ற்- செபஸ்தியான் பாடசாலை பண்டாரநாயக்க மாவத்த.
புறக்கோட்டை — இந்துவாலிபர் சங்கம்.

---

### ''காந்தீயம்''

சம்பந்தமான சகல விபரங்களுக்கும் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

நிர்வாகி
சர்வோதய நிகேதனம்
212, 10 ஆவது குறுக்குத்தெரு,
இந்துக்கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை (இலங்கை)

## ஊழியருக்கு பயிற்சி

காந்தி நூற்றுண்டு விழாவை முன்னிட்டு இந்திய— சர்வசேவா சங்கத்திலிருந்து இரண்டு ஊழியர் அடுத்த மாதம் இலங்கைக்கு வருகிறுர்கள்.

இவர்கள் உருத்திரபுரம்— காந்திநிலையம், இரத்மலானை சர்வோதயநிகேதனம் ஆகிய காந்தி சேவா சங்க நிறுவனங்களில் தங்கி ஊழியருக்குப் பயிற்சி அளிப்பார்கள். பயிற்சிபெற விரும்புவர்கள் பின் வரும் முகவரிகளில் நேரிலோ கடித மூலமோ தொடர்பு கொள்ளவும்.

முகவரி—

காந்தி நிலையம்
உருத்திரபுரம்
தொலைபேசி 254 (கிளிநொச்சி)
அல்லது
சர்வோதய நிகேதனம்
212, 10 ஆவது குறுக்குத்தெரு
இந்துக்கல்லூரிச் சதுக்கம்
இரத்மலானை.

---

### மணிவாக்கு

என்னைப் பொறுத்த வரை நிதி திரட்டுவது ஒன்றும் சிரமமானதாக இல்லை; மக்கள் எவ்வளவு நிதி வேண்டுமானுலும் தருவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. சரியான படி உழைக்கின்ற ஊழியர்கள் கிடைப்பதுதான் சிரமமானதாக இருக்கிறது.

ஃ ஃ ஃ ஃ ஃ

சேவை செய்வதிலேயே மகிழ்ச்சி இருக்கிறது. இதைத் தவிர மகிழ்ச்சியான வேறு ஒன்றைத் தேடிச் செல்ல வேண்டியதில்லை.

—காந்தியடிகள்

# சம்பத்துத்தானம்

சென்ற இதழில் சம்பத் துத்தானங் கோரி அறிக்கை வெளியிட்டிருந்தோம். பல அன்பர்கள் சம்பத்துத்தானமளித்துள்ளனர். அவர்களின் பெயர்களை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

அரசாங்கக்கட்டு வேலைப்பகுதி
கொழும்பு.

| | | ரூபா. | சதம் |
|---|---|---|---|
| திரு | தி. மங்களகுமார். | 2 | 00 |
| ,, | சி. யோ. சந்தியாபிள்ளை | 4 | 00 |
| ,, | ம. குணரத்தினம். | 2 | 00 |
| ,, | எஸ். இராஜேஸ்வரன் | | 50 |
| ,, | எம். கோபாலகிருஷ்ணன் | 2 | 00 |
| ,, | செ. கனகநாயகம் | 1 | 00 |
| ,, | வே. தங்கவேலாயுதம் | 1 | 00 |
| ,, | ஏ. இராசலிங்கம் | 1 | 00 |

செனெற் சபை, கொழும்பு

| | | | |
|---|---|---|---|
| ,, | இ. கதிரவேலு | 2 | 00 |
| ,, | க. துரைராஜா | 1 | 00 |

தெஹிவளை தமிழ்ப்பாடசாலை ஆசிரியர்கள் 30 00

திருமதி ஏ.அருட்பிரகாசம்
வெள்ளவத்தை 2 00

திரு செ. சற்குணனந்தன்
காசல் ஒழுங்கை
பம்பலப்பிட்டி 200 00

,, செ. இராஜேந்திரன்
இந்திய ஸ்டேட் வங்கி
கொழும்பு 2 00

திருமதி. க. சுப்பிரமணியம்.
36-ஆவது ஒழுங்கை வெள்ள வத்தை.
திரு. கே. மார்க்கண்டு விவேகானந்த அவென்யூ வெள்ள வத்தை.
ஆகியோர் மாண வர்க்கு உடைகளை தானமாக வழங்கியுள்ளனர்.
தெஹிவளை பேர்லேயின் தெருவில் இருக்கும் திரு. நடராசா ஆவர்கள் ஒரு மூடை நெல் தானமளித்துள்ளார்.


இளைஞர்களே !
உங்களுக்குத் தொழில் இல்லையென
கவலை ஏன் ?

★ கமம்
★ நெசவு
★ தும்பு
★ அச்சு
★ தையல்
★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.
விபரங்களுக்கு:-
காந்தி நிலையம்
உருத்திரபுரம் (தபால்)
அல்லது
சர்வோதய நிகேதனம்
இந்துக் கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை.



காந்தீய—சர்வோதய
தத்துவங்களை அறிவதற்கு
**கிராமராஜ்யம் , சர்வோதயம்**
ஆகிய பத்திரிகைகளைப்
படியுங்கள்.
காந்தி நிலையம்
உருதத்திரபுரம்



**பனைச்செல்வம்**
(திங்கள் வெளியீடு)
தனிப் பிரதி சதம் 50.
சென்னை மாநிலப் பனை வெல்லக்
கூட்டுறவு சம்மேளனம்
52, கெங்கு ரெட்டி தெரு
எழும்பூர், சென்னை 8.

இலங்கையில்:
காந்தி நிலையம்
உருத்திரபுரம்


# செய்திகள்

சர்வோ தயப் பாத்திரங்கள் மூலம் மார்ச் மாதத்தில் 71 வீடுகளிலிருந்து 94 கொத்து அரிசியும் 12ரூபா 68 சதமும் கிடைத்தது.

வல்வெட்டித்துறையில் சர்வோதய பாத்திர இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மல்லாகத்தில் சர்வோதய பாத்திர இயக்கத்தை ஆரம்பிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடு நடைபெற்று வருகின்றது.

# சர்வோதயப் பாத்திர அன்பர்கள்

சர்வோதய பாத்திரத்தில் நாள் தோறும் பிடி அரிசி இட்டு இதனை மாதந்தோறும் சர்வோதய இயக்கத்திற்கு அளிக்கும் அன்பர்களின் பெயர்களைச் சென்ற இதழில் வெளியிட்டிருந்தோம். மேலும் பல அன்பர்களின் பெயர்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

47 வது ஒழுங்கை வெள்ளவத்தை
திரு சோ. க. தம்பிப்பிள்ளை.
திரு பிலிப்.
திருமதி இரத்தினசபாபதி.
திரு எஸ். அருளம்பலம்.
திருமதி தவமணி.
திரு கார்த்திகேசு
திரு கே. கந்தசாமி
திரு போலிஅத்த

36 வது வீதி வெள்ளவத்தை
திரு எஸ். கனகலிங்கம்
திரு கே. குமாரசாமி
திரு சுந்தரலிங்கம்
திரு டி. அமிர்தலிங்கம்
திரு எஸ். வேலாயுதபிள்ளை
திரு ஜி. சின்னத்துரை
திரு ஆர். எஸ். ஆனந்தன்
திரு எஸ். முத்துக்குமாரசாமி
திரு டி. சபாரத்தினம்
திரு எஸ். கந்தையா
திரு எஸ். சண்முகலிங்கம்
திரு பி. ஆறுமுகம்
திரு வி. கணேஸ்வரன்
திரு பி இரத்தினராஜா
திரு சி. நடராஜா
திரு ஈ. சுப்பரமணியம்
திரு வி. கணேசன்
திரு பி. கைலைநாதன்
திரு எஸ்.எஸ். இரத்தினசபாபதி
திரு கே. செல்வராஜா
திரு என். சரவணபவாணந்தன்
திரு என். ஜெயதேவா


இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் சர்வோதயஅச்சக உபகரணங்களின்உதவியுடன் கொழும்புமெய்கண்டான் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.